செய்தி வெளியீடு எண்: 169 நாள்: 24.02.2011.

**லிபியா நாட்டில் உயிரிழந்த**
**நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளி குடும்பத்திற்கு 1 இலட்சம் ரூபாய் நிவாரண உதவி!**

**முதலமைச்சர் கலைஞர் ஆணை!**

திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி வட்டம், தலைவன்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த முருகையா என்பவர் லிபியா நாட்டில் தனியார் நிறுவனம் ஒன்றில் கூலி வேலை செய்து வந்தார். அவர் அங்கு அண்மையில் நேர்ந்த விபத்து ஒன்றில் உயிரிழந்த செய்தி கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உயிரிழந்தவரின் குடும்பத்திற்குத் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், உயிரிழந்த முருகையா குடும்பத்தின் வறுமைநிலை கருதி அக்குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (24.2.2011) ஆணையிட்டுள்ளார்.

வெளியீடு: –
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை.